FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~

C 8129837

1. District : Madurai — PS: V&Ac — Year: 2025 — FIR No.: 13/2025 — Date: 09.09.202
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — மு.த.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by — Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988 as
   (ii) Act சட்டம்: Prevention of corruption (amendment) Act 2018. — Sections பிரிவுகள்: amended by PC(amendm Act 2018.
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : — Date to :
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை
   (1) 2.9.2025 at 1530 hrs
   (2) 3.9.2025 at 11.45 hrs
   (3) 5.9.2025 at 1300 hrs
   (4) 8.9.2025 at 1240 hrs
   Time Period : — Time from : — Time to :
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 09.09.2025 — Time : 07.45 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 09.09.2025 — Time : 08.45 hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed Petition.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South, 2km.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : Taluk office, madurai South, Madurai Dist. Collectorate campus
   முறைக் காவல் எண் — முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : Madurai — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Ranjith — (b) Father's/ Husband's Name : C. Rathinam
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 25.8.1994 — (d) Nationality : Indian — (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Crusher Business. — (g) Address : 10/14W, North Street, chinnaudaip madurai South Taluk, madurai.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. Rasapandiyan, Tahsildar, madurai South Taluk office, madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached Pages 3 to 9

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

9/9/25

9.9.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.09.2025 1935
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Kumaraguru
Rank: நிலை Inspector of Police, VAC, Madurai

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 09.09.2025-ஆம் தேதி காலை 07.45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், சின்ன உடைப்பு, வடக்கு தெரு, 10/14W என்ற முகவரியில் வசிக்கும் இரத்தினம் மகன் திரு. R. ரஞ்சித் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.R.ரஞ்சித், த/பெ.இரத்தினம், 10/14W, வடக்கு தெரு, சின்ன உடைப்பு, மதுரை தெற்கு வட்டம், மதுரை மாவட்டம். பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. அய்யா, நான் எனது குடும்பத்தினருடன் சின்ன உடைப்பு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோயம்புத்தூரில் உள்ள RVS Engineering College –ல் B.E., Civil பொறியியல் படிப்பை முடித்துள்ளேன். எனது அப்பா 1992 ம் ஆண்டு முதல் மாங்குளம் கிராமத்தில் SSR Blue Metal என்ற பெயரில் Crusher நடத்தி வருகிறார். நான் அவரது Crusher தொழிலுக்கு உதவியாக இருந்து வருகிறேன். எனது அப்பா இரத்தினம் அவர்கள் பெயரில் குசவப்பட்டி கிராம பட்டா எண்.529-க்குட்பட்ட ரீ-சர்வே எண் 33/1 -ல் உள்ள சொத்தை 17.02.2009 ஆம் தேதியும், பட்டா எண்.562-க்குட்பட்ட சர்வே எண் 33/2 -ல் உள்ள சொத்தை 04.02.2011 ஆம் தேதியும், பட்டா எண்.634-க்குட்பட்ட ரீ-சர்வே எண்கள் 32/1, 32/2, 32/4 -ல் உள்ள சொத்துக்களை 11.04.2014 ஆம் தேதியும், விராதனூர் கிராம பட்டா எண்.679-க்குட்பட்ட ரீ-சர்வே எண்கள் 197/2, 197/3 ல் உள்ள சொத்துக்களை 14.09.1998 ஆம் தேதியும் என ஆக மொத்தம் 10 ஏக்கர் 20 செண்ட் நிலங்களை மதுரை தெற்கு சார்-பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் முடித்தோம். மேலும் விராதனூர் கிராம பட்டா எண்.716-க்குட்பட்ட ரீ-சர்வே எண் 197/1 ல் 5 ஏக்கர் நிலத்தை 03.04.2007 ஆம் தேதி எனது சித்தப்பா இராதாகிருஷ்ணன் பெயரில் மதுரை தெற்கு சார்-பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் முடித்தோம். எனது அப்பா பெயரிலும், சித்தப்பா பெயரிலும் உள்ள அந்த இடங்களில் Crusher தொழில் செய்ய முடிவு செய்தோம். அதற்கான வேலைகளை எனது அப்பா என்னை பார்க்க சொன்னார். அந்த crusher தொழில் ஆரம்பிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திலிருந்து சான்று பெற வேண்டும். அதற்காக சம்மந்தப்பட்ட வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் DTCP ஆகிய மூன்று துறைகளிலுமிருந்து சான்று பெறவேண்டும்.

எனவே எனது அப்பா பெயரில் கடந்த 07.08.2025 தேதி DTCP அலுவலகத்திலும், 13.08.2025 ம் தேதி திருப்பரங்குன்றம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஆகிய அலுவலகங்களில் சான்று கேட்டு விண்ணப்பித்துள்ளோம். பின்னர் அந்த இடங்களை சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் அரசு அங்கீகாரம் பெற்ற வீடுகள், வீட்டு மனைகள், புராதான சின்னங்கள், கோவில்கள், மருத்துவமனைகள், பள்ளிகூடங்கள், அரசு கட்டிடங்கள், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் இல்லை என்பதற்கான சான்று பெறுவதற்காக கடந்த 13.08.2025 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு நான் மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்களிடம் அந்த இடத்திற்கான பட்டா, FMB, ஆகியவற்றை இணைத்து எனது அப்பா பெயரில் மனு கொடுத்தேன். அப்போது திரு.ராஜபாண்டியன் அவர்கள் என்னிடம் அதனை VAO மூலம் விசாரணை செய்தும், அதற்கான அடங்கல், அ பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்ட பின்னர் அதற்கான 500 மீட்டர் சுற்றளவு சான்று வழங்குவதாக கூறி அனுப்பிவைத்தார். பின்பு 15.08.2025 ம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு எனது செல்போன் எண் 8870858456-லிருந்து விராதனூர் VAO திரு.ஆனந்த் அவர்களின் செல்போன் எண். 6381261071 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசிய போது, VAO அவர்கள் என்னிடம் எனது அப்பா பெயரில் உள்ள இடங்களுக்கு 500 மீட்டர் சுற்றளவு சான்றிற்கான மனு விசாரணைக்காக அவரிடம் வந்துள்ளது என்றும், அதனை அவர் ரெடி செய்துவிட்டு கூப்பிடுகிறேன் என்று கூறினார். பின்னர் அன்று மதியம் சுமார் 12.15 மணிக்கு மீண்டும் VAO ஆனந்திற்கு நான் போன் செய்து அது சம்பந்தமாக கேட்டேன். அதற்கு VAO இன்னும் வேலை முடியவில்லை, முடித்துவிட்டு போனில் கூப்பிடுவதாக கூறி போனை வைத்துவிட்டார். பின்னர் 16.08.2025 ம் தேதி காலை சுமார் 10.20 மணிக்கு மீண்டும் நான் VAO விடம் போனில் பேசியபோது கூப்பிடுகிறேன் என கூறிவிட்டு போனை துண்டித்துவிட்டார். பின்னர் நான் 19.08.2025ம் தேதி மதியம் சுமார் 01.15 மணிக்கு VAO விடம் போனில் பேசியபோது அவர் என்னிடம் எங்களது மனுவில் குறிப்பிட்ட இடங்களை field visit செய்ய வேண்டும் என கூறினார். நானும் சரி என்றேன். பின்னர் அன்று மதியம் சுமார் 03.00 மணிக்கு VAO என்னை போனில் தொடர்பு கொண்ட போது, அவர் என்னிடம் உங்க அப்பா பேசினாங்க, நான் வேறு வேலையா போய்விட்டேன் அதனால் அறிக்கை அனுப்ப முடியவில்லை, ஒன்னும் நினைக்காதீங்க நான் சீக்கிரம் முடித்து report யை

அனுப்பிவிடுகிறேன் என்று கூறினார். பின்னர் அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு VAO எனக்கு போன் செய்து எங்களது இடத்தை field visit செய்வதற்காக அவர் வந்து கொண்டிருப்பதாக கூறினார். பின்னர் மீண்டும் அவர் சுமார் 04.20 மணிக்கு எனக்கு போன் செய்து எங்களது இடம் எங்க இருக்கிறது என விசாரித்தபோது, அவரிடம் நான் எனது இடத்தில் தான் இருக்கிறேன் என்று கூறி வழியை சொன்னேன். அவரும் தலையாரி அவர்களும் வந்து இடத்தை பார்வையிட்டு விட்டு அதற்கான அறிக்கையை RI க்கு அனுப்பிவிடுவதாக என்னிடம் கூறிவிட்டு சென்றார்கள். பின்னர் நான் 20.08.2025 ம் தேதி வருவாய் ஆய்வாளருக்கு எனது செல்போன் எண்ணிலிருந்து அவரது செல்போன் எண் 99949-96874 க்கு போன் செய்தேன், அவர் போனை எடுக்காததால், மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் செல்போன் எண் 7904292168 என்ற எண்ணிற்கு எனது செல்போன் எண்ணிலிருந்து மூன்று முறை (காலை சுமார் 10.00 மணி, மதியம் சுமார் 12.20 மணி மற்றும் 01.20 மணி) தொடர்பு கொண்டபோது RI இன்னும் Office க்கு வரவில்லை அவர்கள் வந்தவுடன் வருகிறோம் என்று கூறினார். பின்னர் 23.08.2025 ம் தேதி காலை சுமார் 10.10 மணிக்கு நான் வருவாய் ஆய்வாளரை போனில் தொடர்பு கொண்டபோது அவர் என்னிடம் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுடன் இரண்டு நாட்களில் இடத்தை பார்வையிட வருவதாக கூறினார். பின்னர் 25.08.2025 ம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு எங்களது இடத்தை இன்று பார்வையிட வருவதாக கூறினார். அன்று மதியம் மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள், விராதனூர் VAO மற்றும் RI ஆகியோர்களுடன் வந்து எங்களது இடத்தை பார்வையிட்டார்கள். அவர் அதனை பார்வையிட்டு முடித்துவிட்டு தனது அறிக்கையை தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பிவிடுவதாக கூறினார். பின்னர் 26.08.2025 ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு நான் தாசில்தார் அவர்களை சந்திக்க சென்றேன். அப்போது மண்டல துணை வட்டாட்சியர் மட்டும் அலுவலகத்தில் இருந்தார். அவர் அறிக்கையை அலுவலக துணை வட்டாட்சியருக்கு அனுப்பிவிட்டதாக கூறினார். பின்னர் 27.08.2025 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு நான் தாசில்தாரை பார்த்தபோது தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடமிருந்து கோப்பு வந்தவுடன் எங்களது இடத்தை பார்வையிட்டு சான்று வழங்குவதாக கூறினார். பின்னர் 01.09.2025 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு நானும், அப்பாவும் இது சம்பந்தமாக

தாசில்தாரை சந்தித்தபோது நாளை (02.09.2025 ம் தேதி) அவர் சின்ன உடைப்பு கிராமத்தில் ஆக்கிரமிப்பு அகற்றும் பணிக்கு வரும்போது எங்கள் இடத்தை பார்வையிட வருவதாக கூறி அனுப்பிவைத்தார். பின்னர் 02.09.2025 ம்தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு தாசில்தார் அவரது செல்போன் எண் 9942648654-லிருந்து எனது செல்போனில் கூப்பிட்டு அவர் சின்னஉடைப்பு கிராமத்தில் இருப்பதாகவும், எங்கள் இடத்தை பார்வையிட வருவதாகவும் கூறினார். பின்னர் அன்று மதியம் சுமார் 03.30 மணிக்கு அவர், எங்கள் இடத்திற்கு வந்து அதனை பார்வையிட்டு விட்டு, என்னிடம் இது சம்பந்தமாக விசாரணை செய்தபின்பு, அதற்கான சான்று தருகிறேன் என கூறினார். அதற்கு நான் அவரிடம் சரி சார், பண்ணி கொடுங்க சார் என்று சொன்னேன். அப்போது அவர் அவரது வாகனத்தில் ஏறி அமர்ந்துகொண்டு பண்ணிதரேன் தம்பி என்று சொல்லி கொண்டே ஒரு விரலை காண்பித்து பண்ணிவிடுங்கள் என்று என்னிடம் கூறினார். நான் அவரிடம் office க்கு வரேன் சார் என்று கூறியவுடன், அதற்கு அவர் கம்மி தான், ஏன்னா RDO-லாம் கிடையாது நம்ம லெவல்ல போடுறது தானே என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் Office-க்கு வந்து பார்க்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் எதுவாக இருந்தாலும் இங்கேயே முடிச்சு விடுங்கப்பா என்றார். அதற்கு நான் ரூ.20,000/- அல்லது Stock Yard ஆரம்பிக்கும்போது ரூ.50,000/- தருகிறேன், பார்த்து செய்யுங்க சார் என்றேன். அதற்கு அவர் என்னப்பா நீ சொல்ற, பார்த்து கொடுங்க, நாளைக்கு நான் கேட்ட பணம் ரூ.1,00,000/-த்துடன் Office க்கு வாங்க என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் 03.09.2025 ஆம் தேதி காலை சுமார் 11.40 மணிக்கு நான் தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு சென்ற போது தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்கள் ஆபிசைவிட்டு வெளியே வந்தார். நான் அவரிடம் எனது அப்பா பெயரில் உள்ள இடங்களுக்கு 500 மீட்டர் சுற்றளவு சான்று குறித்து கேட்டேன். அதற்கு தாசில்தார் என்னிடம் அவர் அவனியாபுரம் வரை செல்வதாகவும், என்னை இராமநாதபுரம் ரிங்ரோடு சந்திப்பிற்கு வரும்படி கூறி சென்றுவிட்டார். பின்னர் ஐந்து நிமிடம் கழித்து சுமார் 11.45 மணிக்கு டிரைவர் திரு.ராம்கி அவர்களின் செல்போன் எண் 7395888370 லிருந்து எனது செல்போன் எண்ணில் அழைத்து தாசில்தார் அவர்கள் என்னிடம் பேசி, அவர் கேட்ட பணம் ரூ.1,00,000/- கொண்டு வந்துள்ளீர்களா என கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் ரூ.30,000/- ம்தான் உள்ளது என்று கூறினேன். அதற்கு

அவர் இன்று நான் உங்களை பார்க்கமுடியாது நான் மதுரை city க்குள் செல்கிறேன், நீங்கள் நாளை வந்து பாருங்கள் என கோபமாக கூறினார். நான் crusher வேலையாக இருந்ததால் 04.09.2025 ம்தேதி தெற்கு தாலுகா அலுவலகம் செல்லவில்லை. பின்னர் மறுநாள் 05.09.2025 ம்தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு நான் மாட்டுத்தாவணி காவல் நிலையம் அருகே இருந்தபோது டிரைவர் திரு.ராம்கி அவர்களின் மொபைல் நம்பரில் இருந்து Whatsapp call வந்தது, நான் போனில் பேசியபோது திரு.ராம்கி அவர்கள் பேசி, பின்னர் தாசில்தார் பேசுவதாக கூறி போனை தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்களிடம் கொடுத்தார். அப்போது தாசில்தார் என்னிடம், உங்கள் மனுவில் குறிப்பிட்ட சர்வே எண் 197/1 வேறு பெயரில் உள்ளதே அதற்கு நான் எப்படி சான்று தரமுடியும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அந்த இடத்தையும் எனது சித்தப்பாவிடம் இருந்து எனது அப்பா பெயருக்கு கடந்த 02.09.2025 தேதி கிரையம் முடித்துவிட்டார் என கூறினேன். அதற்கு அவர் பட்டா மாறாமல் நான் எப்படி சான்று கொடுக்கமுடியும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் அப்படியானால் எனது அப்பா பெயரில் உள்ள இடங்களுக்கு மட்டும் 500 மீட்டர் சுற்றளவு சான்று கொடுங்கள் என்றேன். உடனே திரு.ராஜபாண்டியன் அவர்கள் சரி நான் கேட்ட பணம் ரூ.1,00,000/-த்தை கொடுத்துவிட்டு சான்று பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். பின்னர் நேற்று (08.09.2025 தேதி) மதியம் சுமார் 12.40 மணிக்கு நானும், எனது அப்பாவும் மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு சென்று தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்களை சந்தித்து எங்களுடைய 500 மீட்டர் சுற்றளவு சான்று குறித்து கேட்டோம். அதற்கு தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்கள் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், கொடுக்கறத கொடுங்க அவ்வளவு தான் என்றார். அதற்கு எனது அப்பா 70 ரூபாய் தர்றேன் என்றார். அப்பொழுது தாசில்தார் அவரது போனில் யாரிடமோ பேசிவிட்டு, எங்களிடம் இப்ப நீங்க 70 ரூபாய்க்கு வந்திருக்கீங்க, கொடுக்கறத கொடுங்க அவ்வளவு தான் என்றார். உடனே என் அப்பா 70 ரூபாய் கொடுக்க வா என்றார். அதற்கு தாசில்தார் அவர்கள் சரி அதை ராம்கியிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். அப்போது நான் நாளைக்குதான் என தாசில்தார் அவர்களிடம் கூறியவுடன், அவர் சரி, சர்வே நம்பர் 197/1 என எங்களிடம் கூற, அதற்கு எனது அப்பா அந்த இடத்தையும் அவரது பெயரில் பதிந்துவிட்டோம், பட்டா வாங்கவில்லை என்று கூறினார். அதற்கு தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்கள்

அந்த இடத்திற்கும் பட்டாவை வாங்கி வந்தால், அதற்கும் சேர்த்து ஒரே நேரத்தில் சான்று வழங்குவதாக எங்களிடம் கூறினார். உடனே நான் எனது அப்பா பெயரில் உள்ள இடங்களிற்கு மட்டும் தற்போது 500 மீட்டர் சுற்றளவு சான்று கொடுங்கள், அந்த இடத்திற்கு பின்னர் சான்று வாங்கி கொள்கிறேன் என்று கூறினேன். அவர் சரி பரவாயில்லை பட்டா வாங்கிய பிறகு சொல்லுங்கள், அந்த இடத்திற்கும் பழைய தேதியிலேயே கொடுத்துவிடுகிறேன் என்று கூறினார். அதற்கு எனது அப்பா தாசில்தார் ராஜபாண்டியன் அவர்களிடம் ரூ.70,000/- தருவதாக கூறினார். அதற்கு தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்கள், சரி நீங்கள் உங்களது மகனிடம் நாளை (09.09.2025) அந்த பணத்தை கொடுத்து அனுப்பி அலுவலகத்திற்கு வந்து என்னிடம் கொடுக்கச் சொல்லுங்கள், உங்களுக்கான சான்றிதழை உடனே கொடுத்துவிடுகிறேன் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்னர் அங்கிருந்து வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது அப்பா என்னிடம், தற்போது தொழில் ஒன்றும் நன்றாக இல்லை, அரசு வேலையை செய்வதற்து லஞ்சமாக பணம் கேட்டு தாசில்தார் அலையவிடுகிறார் என்று வருத்தப்பட்டு Crusher தொழில் செய்ய 500 மீட்டர் சுற்றளவு சான்று வழங்க தெற்கு தாலுகா, தாசில்தார் திரு. ராஜபாண்டியன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை என்று கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்து என்னை மதுரை லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்தில் தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்கள் மீது புகார் கொடுக்க சொன்னார். எனவே, எனது அப்பா பெயரில் உள்ள மனுவின்மீது நடவடிக்கை எடுத்து 500 மீட்டர் சுற்றளவு சான்று வழங்க எங்களிடம் ரூ.70,000/- லஞ்சம் கேட்கும் மதுரை தெற்கு தாலுகா, தாசில்தார் திரு. ராஜபாண்டியன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இம்மனுவினை கொடுக்கின்றேன். இத்துடன் 13.08.2025-ம் தேதி எனது அப்பா ரத்தினம் அவர்களது பெயரில் மதுரை தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் 500 மீட்டர் சுற்றளவு சான்று கேட்டு விண்ணப்பித்த மனுவின் நகல், அந்த மனுவுடன் இணைத்துக்கொடுத்த எனது தந்தை இரத்தினத்தின் பெயரில் உள்ள குசவபட்டி கிராம பட்டா எண்கள் 529, 562, 634, விராதனூர் கிராம பட்டா எண்கள் 679 மற்றும் எனது சித்தப்பா பெயரில் உள்ள பட்டா எண். 716 ஆகியவற்றின் நகல்கள் மற்றும் அதன் FMB நகல்களை இணைத்துள்ளேன். மேலும் தெற்கு தாலுகா, தாசில்தார் திரு. ராஜபாண்டியன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.70,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். அத்துடன் தாசில்தார் திரு.ராஜபாண்டியன் அவர்களை கடந்த 02.09.2025ம் தேதி எங்களது இடத்தை Field Visit செய்தபோது எனது PenCamera

மூலம் எடுத்த வீடியோ பதிவு மற்றும் 08.09.2025ம் தேதி மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்தில் திரு.ராஜபாண்டியன் அவர்களை நானும் எனது அப்பாவும் சந்தித்தபோது எடுத்த வீடியோ பதிவுகள் ஆகியவற்றை எனது PenCamera-வில் இருந்து Sandisk ultra USB 3.0, 32 GB Pendrive-ல் பதிவிறக்கம் செய்ததையும் புகார் மனுவுடன் இணைத்துள்ளேன். அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX (R.Ranjith)** 9/9/25.

Sir, Received the typed complaint today on 9.9.2025 at 07.45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 13/2025, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (K.Kumaraguru) 9.9.2025, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.R. Ranjith, S/o.Rathinam, 10/14W, North Street, Chinna Udaippu, Madurai South Taluk, Madurai District along with Photo copies of Application Requesting to issue 500 Meter Radius Certificate in the name of S.Rathinam, Kusavapatti Village Patta Nos.529, 562, 634 and Virathanoor Village Patta No. 679 in the name of S. Rathinam, Virathanoor Village Patta No. 716 in the name of Tr.Radhakrishnan and FMBs for the above said Patta nos and Sandisk ultra USB 3.0, 32 GB Pendrive-1 are herewith enclosed and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

9.9.2025

(K. Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.